tamilisch

# சிறு குழந்தைகளுக்கும் கற்றல் மிகவும் அவசியமானது!











- உங்கள் குழந்த்தையுடன் விளையாட்டுத் திடல் மற்றும் இயற்கைச் சூழலுக்குச் செல்லுங்கள். குழந்தை தீவிரமாக ஓடி ஆடுதல் அவசியமாகும்.
- விளையாட்டு மற்றும் ஓடி ஆடுதலில் முன் அனுபவமில்லாத குழந்தைகள் பின்னாளில் பாடசாலையில் பிரச்சனைக்குள்ளாகிறார்கள்!
- மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுவது சமுதாய அறிவுக்கு அத்தியாவசியமாகும். அத்துடன் அவர்களின் நடவடிக்கை மற்றும் அனுபவங்களில் நீங்களும் முடிந்த அளவு பங்கெடுத்துக் கொள்ளல் மிகவும் அவசியமாகும்!
- அதில் உங்களுக்குப் பெருமகிழ்ச்சியுண்டாக வாழ்த்துகிறோம்!
- கேள்விகளுக்கு உங்கள் குழந்தை நல மருத்துவர், பாலர்பாடசாலை அல்லது பாடசாலை ஆசிரியர் அல்லது நிபுணரை அணுகவும்.

ஒரு சிறு குழந்தை விளையாட்டு, கைவேலை மற்றும் வீட்டில் மற்றவர்களுடன் சேர்ந்து வீட்டு வேலைகளில் ஈடுபடும் பொழுது சிறப்பாகக் கற்றுக்கொள்கிறது

கணினி அல்லது தொலைக்காட்சிப்பெட்டியிலிருந்தல்ல

gemeinde buchs

Schulverwaltung
St. Gallerstr. 2
9471 Buchs

schulverwaltung@buchs-sg.ch

முன்கூட்டியே கற்றல் பின்னாளில் பாடசாலையின் வெற்றிக்கு அவசியமாகும். இது சிறுவயதுக் குழந்தையிலேயே ஆரம்பிக்கின்றது

# இவ்வாறாக வீட்டில் உங்கள் குழந்தையைப் பாடசாலைக்குத் தயார்ப்படுத்துங்கள்:



## பேசுதல்

குழந்தையுடன் உங்கள் தாய்மொழியில் பேசுங்கள்!

உங்கள் குழந்தை தாய்மொழி நன்றாகப் பேசிப் புரிந்துகொள்வது ஜேர்மன் மொழியைக் கற்றுக்கொள்வதற்கு மிகவும் அவசியமாகிறது!



## வடிவங்கள்

உங்கள் குழந்தையை மணற்கூண்டில் தண்ணீர், கற்கள், மண்வாரி, குவளைகள் ஆகியவற்றுடன் விளையாட விடுங்கள்!

குழந்தை இவ் விளையாட்டின் மூலம் கணிதத்தின் மூலத்தை அறிந்து கொள்கிறது! (உ+ம்: காலியாக்குதல், நிரப்புதல், வடிவமைத்தல்)



## உருவமைப்பு

உங்கள் குழந்தைக்கு காகிதம், பெட்டிகள், ஒட்டும் நாடா, ஒரு கத்தரிக்கோல், பசை ஆகியவற்றைக் கொடுத்து அதனுடன் கைவேலைகளில் ஈடுபடுங்கள்!

இதனால் குழந்தை துல்லியமான அசைவுகளை கற்றுக்கொள்கிறது. உங்கள் குழந்தையின் எண்ணக்கருத்து மற்றும் கற்பனாசக்தி விருத்தியடைகிறது!



## கேட்டறிதல்

உங்கள் குழந்தையுடன் படங்களுடனான புத்தகங்களைப் பாருங்கள், அதற்குத் தேவதைக் கதைகள் மற்றும் கதைகளை விவரியுங்கள்!

இதனால் பிற்பாடு உங்கள் குழந்தை பாடசாலையில் சிறப்பாக விவரிக்கவும் கதைகள் எழுதவும் முடியும்! இவ்வாறாக உங்கள் குழந்தை அவதானமாகக் கேட்டறியவும் மனதை ஒருமைப் படுத்தவும் கற்றுக் கொள்கிறது!



## கட்டுதல்

உங்கள் குழந்தையை கட்டுமானக் கட்டைகள், லேகோஸ், பெட்டிகள், கற்கள் ஆகியவற்றுடன் கட்டவும், கட்டமைக்கவும் விடுங்கள்!

இது உங்கள் குழந்தை எதிர்காலத்தில் இலகுவாகக் கற்பதற்கு மிகவும் உதவுகிறது! அது வடிவமைப்பதற்கும், அளவு மற்றும் தொகையை அறிந்து கொள்வதற்கும் வேறுபடுத்திப் பார்ப்பதற்கும் கற்றுக்கொள்கிறது.



## அனுபவம்

உங்கள் குழந்தைக்கு காகிதம், பெட்டிகள், ஒட்டும் நாடா, ஒரு கத்தரிக்கோல், பசை ஆகியவற்றைக் கொடுத்து அதனுடன் கைவேலைகளில் ஈடுபடுங்கள்!

இதனால் குழந்தை துல்லியமான அசைவுகளை கற்றுக்கொள்கிறது. உங்கள் குழந்தையின் எண்ணக்கருத்து மற்றும் கற்பனாசக்தி விருத்தியடைகிறது!



## புரிந்துகொள்ளல்

கூடியவரையில் உங்கள் குழந்தைக்கு நாளாந்தப் பாவனையிலுள்ள பொருட்கள் பற்றிக் கூறி விளங்கப்படுத்துங்கள்! (உ+ம்: தளபாடங்கள், ஆடையணிகள், உணவுப்பொருட்கள் ஆகியன.)

தாய்மொழியில் அதிகளவு வார்த்தைகளை அறிந்திருப்பது பின்னர் பாடசாலையில் ஜேர்மன் வகுப்பில் மிகவும் அவசியமாகிறது!



## வரைதல்

உங்கள் குழந்தைக்கு காகிதங்கள் மற்றும் வண்ணங்களைக் கொடுத்து அவர்கள் வரையவும், உருவமைக்கவும் விடுங்கள்!

இதன் மூலம் உங்கள் குழந்தை கை மற்றும் விரலசைவுகளைக் கற்றுக்கொள்கிறது. இது பிற்பாடு எழுதுவதற்கு அவசியமாகிறது!



## முயற்சித்தல்

உங்கள் குழந்தை தானாகவே ஆடை அணிவதற்கும், வீட்டில் மற்றைய வேலைகளைச் செய்வதற்கும் கூடிய விரைவில் முன்னராகக் கற்றுக்கொள்ளல் வேண்டும்! (உ+ம்: ஆப்பிள் தோல் சீவுதல், பாத்திரங்கள் கழுவுதல், சாப்பாட்டு மேசை தயார் செய்தல் ஆகியவை.)

இது பாடசாலை நாட்களில் உங்கள் குழந்தை பிறரைச் சாராமல் தனித்தியங்குவதை இலகுவாக்குகிறது!